**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.22/2013**

2025 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பெரியசாமி (அ.சா.8) | தொழில் | : | விவசாயம் |
| த/பெ., | : | திரு. குமாரசாமி | வயது | : | 49 |
| க/பெ. | : | திரு. | | | |
| கிராமம் | : | கொங்கபட்டி | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | ஒட்டன்சத்திரம் | நாள் | : | 06.08.2025 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1,4,5,6 எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்.

**முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

நான் கொங்கபட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 5 ம் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. தமிழரசி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் 5 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான். பணம் கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சியில் உள்ள இரண்டாவத சாட்சிக் கையொப்பமும் என்னுடையதுதான். மேற்படி கையொப்பங்களை சுமார் 15 வருடங்கள் முன்பாக ஒருநாள் காலை 06.00 மணியளவில் நானும் என் உறவினரான அ.சா.7 முருகேசன் என்பவரும் போட்டோம். கோவிலுக்கு வந்தபோது பழனி பஸ் ஸ்டாண்ட் அருகில் உள்ள குளத்து ரோட்டில் வைத்து போட்டோம். பணம் கைப்பற்றியதாக சொல்லி உதவி ஆய்வாளர் சாட்சி கையொப்பம் போட கேட்டார். பணம் ரூ.39,500/– கைப்பற்றப்பட்டதாக சொன்னார். யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

**<u>5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

**நான் கையொப்பமிட்ட தாள்களில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பமிட்டேனா என்றால் ஆம். தொகை நான் எண்ணிப் பார்க்கவில்லை. போலீசார் சொல்லித்தான் தொகை விபரம் எனக்கு தெரியும். அப்போது அருகில் நிறைய நபர்கள் இருந்தார்களா என்றால் ஞாபகமில்லை. காலை நேரத்தில் அந்த பகுதியில் அதிக மக்கள் நடமாட்டம் இருந்ததா என்றால் ஞாபகமில்லை. காவல் துறையினர் எனக்கு பழக்கமானவர்கள் என்றும், அதனால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.**

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.08.06 17:20:43 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**